உ

சிவமயம்.

கணபதிதுணை.

சற்குருமணிமாலை.

வீணாகானபுரஸ்தநல்லூராக்கியநகரநிவாச

ஸ்ரீமந் நாவலர்பெருமான் பாததூளி

சிரமேற்கொண்டவரும்

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டைக்

கதிர்காசியர்மைதரும

சைவப்பிரகாசவித்தியாசாலைப் பிரதிஷ்டாபகருமாகிய

ஆ. அம்பலவாணநாவலர்

செய்தது.

இது

கொத்தமங்கலம்

சி. அ. சுப்பிரமணியச்செட்டியார் குமாரர்

செல்லப்பசெட்டியாரால்

சென்னபட்டணம்

ஊ - புஷ்பரதசெட்டி அண்டு கம்பினியாரது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

துன்முகிஸு வைகாசிமீ.

1896

கலியப்தம்-௪௯௯௮.

சிவ மயம்.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சற்குருமணிமாலை.

காப்பு.

பூவலயஞ்செய்தமாதவமோருருப்போந்துவந்த
நாவலசற்குருமாமணிமாலைநயந்தியலப்
பாவலநம்பிக்கருண்மாமுறையுண்மைபாலித்தநங்
காவலநாரையிற்பொல்லார் கழலிணைகாப்பதுவே.

நூல்

திருவேயருட்செல்வமேசிவமேசிவசிற்சுகமே
மருவேமருவின்மலரோமலர்க்கற்பகவனமே
கருவேயிரித்தெமையாண்டிடநீயுருக்கண்டனையே
குருவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧)

நாயேனையாளவொர்மாநுடக்கோலநயந்துபெற்ற
தாயேயெனைநனிபாராட்டியன்பிற்றழீஇயெடுத்து
மாயாவறிவமுதூட்டினையேயின்பவாழ்வுறுவான்
கூயாளெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨)

புன்னெறிக்கேயறிவில்லாப்பருவத்திற்புக்குழன்று
பன்னரகாழவிருந்தேனையின்னருட்பார்வைநல்கித்
தொன்னெறிகாட்டியதாதாய்மெய்யின்பந்தொகுத்தலென்று
கொன்னெறியாறுமுகநாவலசற்குருமணியே. (௩)

பொறியேமனஞ்செலயானதன்பின்சென்றுபூங்குழலார்
மறியேய்கடைக்கட்கிரையாகிமாய்ந்தனன்வாய்ந்தவன்பும்
பறியேகொடுத்தனன்பார்ப்பதென்றோநின்பதமலர்க்கீழ்க்
குறியேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௪)

கல்லேனென்னூலவையுற்றுணர்ந்தாரதங்கழகத்திணுரு
செல்லேனறிவன்பருள்பொறையாதியசீலமொன்று
மில்லேனெந்தாயுய்யுமாறொருபாயமிசைப்பதென்று
கொல்லோவெம்மாறுமுகநாவலசற்குருமணியே (ரு)

தண்டேன்மலர்க்குழன்மாதரும்பொன்னுந்தரணியுமாம்
பண்டேவருமுப்பகைதவிர்த்தாண்டருள்பாலிப்பது
முண்டேயருள்கநின்றொண்டர்க்குப்பாலனபுரவுரிமை
கொண்டேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே (சா)

பூவாரயனரியாரையும்பாமப்புணைவுறுமே
யேவாநின்றார்விசயத்தப்பனாடினரிப்படிநமு
தேவேநின்பேர்சொலிற்பிறவண்டமிட்டேடுமவர்தேர்ந்தனையாங்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (எ)

வீறுவெண்கொற்றக்குடைநிழல்மாமணியாசனமே
லேறுவிருந்தரசாள்வதினைப்பதன்றுன்னிலேனையகற்
மாறுதவன்பொடுபச்சையன்றொருந்தனன்வாவென்றெனைக
கூறுயெம்மாறுமுகநாவலசற்குருமணியே (அ)

காலேய்ந்திலனடன்னையேய்ந்திலனையன்சன்மசன்ம
பாலேய்ந்திலன்செய்தீன்வதுபாவியினன்பாவிபல
நூலேய்ந்திலன்கற்றுயவாய்ந்திலனேனுநாவலருட்செங்
கோலேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கூ)

எத்தாதுநாவுமிறைஞ்சாத்தலையுமெண்ணுதெஞ்சுங்
காத்தாண்டநின்னுருக்காணுதகணுங்கருகசடந்த
மீத்தானமாள்பொருளேயெளியேற்குவிதித்தனையே
கூத்தாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௰)

தொண்டர்தஞ்சீரினையாத்துவைத்தார்பரிசுத்தருண்
மண்டுசலதியெங்குன்றையார்காவலர்வாவிதின்யாங்
கண்டிடநீயதுபாத்தளித்தாயெங்கலிதுவிர்த்த
கொண்டலெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கக)

அபாயமின்றேயுமநபாயனைவைத்தருண்முறைக்கே
யுபாயங்கொண்டார்குன்றைகாவலர்நீயவையுற்றுமன்ன
வுபாயங்கொள்ளாததுபாத்தளித்தாயிருவோருமொன்றுங்
குபாயங்கொளாறுமுகநாவலசற்குருமணியே. (கஉ)

தேவமெய்யாநாவலநாமத்தைப்பற்றிச்சிறந்தனர்முன்
பாவாணரங்கதுநின்னைப்பற்றியபாமைமையினு
[illegible]ாரினைத்துருடிமென்றேசிறந்தாயதருட்
கோமேமெய்யாறுமுகநாவலசற்குருமணியே. (க௩)

அன்னொன்றுமினைநின்செயனின்செயலாநின்னருண்மரபை
பொன்றாமென்னைக்கொண்டிங்கபேதந்திருந்துநின்பாற்
பண்ணுரைசெப்பவரியுநின்றிமுற்றப்பணிக்கவருள்
கொண்டெம்மையாறுமுகநாவலசற்குருமணியே. (க௪)

நீருண்மணிமெய்யாமேசுபருசாக்கரநேர்மைமெங்கே
வீரவர்வைதிகசைவமெங்கேதமிழ்வேதமெங்கே
தூற்றுபவியிலெஞ்ஞானிந்நாள்வந்துதோன்றிலையேற்
கூறருளாறுமுகநாவலசற்குருமணியே. (க௫)

சேசுவென்றோபுதுப்புன்மதமேலைத்திசையிலுளோர்
காசொடுவந்ததைநின்னுண்டஞ்செய்தகாட்சிவலி
யீசநினக்கொர்பெருமையதோவஃதிசைக்கவென்னைக்
கூசுமெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (க௬)

மாதனைககண்டுபயங்கொளலவரவாழ்வுநின்பா
லாதரவிற்பெறுமாதவஞ்செய்திலனன்பிலராம்
பாதகர்க்கெற்பதறிவரியோயன்பர்பாக்கியமே
கோதொழியாறுமுகநாவலசற்குருமணியே. (க௭)

அன்றேயென்றேதுமவ்வற்புதப்பாடலழகியசின்
மன்றேயுடையவர்பூசையினியருள்வாய்மலர்ந்த
தின்றேயுமுள்கினன்கண்டேயென்றேதவினித்ததருட்
குன்றேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (க௮)

ஞானவொழுக்கம்வறந்தகட்டக்கலிநாளில்வந்து
ஞானவொழுக்கப்பிரசங்கமாமழைஞாலமெல்லாங்
கானமெனப்பொழிந்தாய்த்தாயருட்புட்கலாவர்த்தமே
கோனமதாறுமுகநாவலசற்குருமணியே. (க௯)

தண்டாவருட்பிரசங்கப்பெருமழைத்தண்ணமுதைக்
கொண்டோர்கொண்டுய்யமற்றெஞ்சியதோகொள்ளைகோத்தபன்
கண்டார்கழகமென்கால்கள்குளங்களிற்கட்டிவைத்தாய் [ஞால்
கொண்டாடெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௦)

சற்குருமணிமாலை.

அஞ்சுமுகமதுதோன்றிடிலாறுமுகம்வருமென்
றெஞ்சலிலாமொழிதந்தாய்மலைக்கிலக்கோதின்னு
நெஞ்சினுணின்றதுதந்தகொலுவுங்கண்ணோர்நின்றதெங்
குஞ்சரவாறுமுகநாவலசற்குருமணியே. (௨

நாவலர்பாவலர்ஞானிகள்யோகிகளுமெனமேவா
காவலநாட்டிலிந்நாள்பலர்வாழுங்கருபயெல்லாப்
பூவலயஞ்செய்தபாக்கியநீவெங்கடபுண்ணியங்காளை
கோவலவாறுமுகநாவலசற்குருமணியே. (௨௨

இருவேறுலகத்தியற்கையென்பார்க்கினியான்சொல்லுமேகன்
றிருவோநின்வாயிலைக்காத்தனன்ஞானத்திருநின்படைக்
குருகார்ந்தபல்லிகள்வாயிலைக்காந்தனன்கோமனையே
குருவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௩

ஞானவரோதயதீனதயாபரநாதகுண
கானதிராவிடவேதபராயணகாருணிக
பானசுதாநிதிசாலலோகாதீதபாவகன்
கோனருளாறுமுகநாவலசற்குருமணியே. (௨௪)

வைதிகசைவநிலைதளராதுவளர்க்கவந்து
மைதவிர்கண்டத்தெம்வாழ்வேநின்போலுமதிக்கிலிந்தப்
பொய்திகழ்ஞாலத்தில்யாரோயுளர்பல்புரைநெறிகள்
கொய்தெழுமாறுமுகநாவலசற்குருமணியே. (௨௫)

யாரோவருகுநர்நின்போலயாரறிவிக்குநர்மற்
றியாரோயிகழும்புகழெனப்பூணுநரொன்றுமொன்று
யாரோநியமங்கடைபோகவுய்க்குநர்ஞானமதிக்
கூரோயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௬)

பொய்யாமணிவிளக்கேநின்றனும்புகன்றவர்பாற்
செய்யாளமருமரோகந்திடநிலைசீலமரு
ணையாதசொல்வலிஞானமுண்டாமிதுநன்றுகண்டாங்
குய்யாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௭)

அடித்தடித்துவக்காரமுன்றீற்றியவற்புதத்தைப்
பிடித்துய்கிலாரதுகோபமென்றேசிலர்பேயருண்மை
விடுத்திறந்தார்தலைமேலெழுத்தார்தமைவிட்டதந்தோ
கொடுத்தமெய்யாறுமுகநாவலசற்குருமணியே. (௨௮)

ஐயாநின்றுவினில்வைதாலுமஃதொருரும்பெறலென்
றெய்யாதுநின்னடிகாத்திருந்துய்ந்தனரொத்தனைபேர்
மையாகசப்பதன்றேநோமெயெளிதிற்றவிர்ப்பதறி
குய்யாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௨௯)

நீணிதேற்றிடிற்றேறுதவரெவர்நின்மொழியா
மேணியாற்றிடிற்பாறுதவரெவரின்னருணின்
காணியேற்றிடினேறுதவரெவர்காட்சிதந்த
கோணியாறுமுகநாவலசற்குருமணியே. (௩0)

வைதிகநூல்பொதுசைவஞ்சிறப்பெனனும்வாய்மைநெறி
பொய்திகழாதுவாம்புசெய்தாய்ப்புரிபுண்ணியர்கள்
மொய்திகழ்நின்னடிநீழல்வாழ்கபன்னூற்கர்நெறி
கொய்தெழுமாறுமுகநாவலசற்குருமணியே. (௩௧)

அருளாரெங்காழிந்துறைமுதலவாருளிச்செய்த
பொருளாரநாதிதிராவிடவேதந்தைப்போற்றுநெறி
தெருளார்தரயன்வரம்புசெய்தாய்சைவதேசிகவெங்
குருவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௨)

நான்மறையூட்டியநற்கதவந்தனைநாயன்முனி
மேன்முறையோரஞ்சிவேறகன்றார்விரகார்மெய்த்தமிழ்ப்
பான்மறையேநிறந்திட்டதுதாற்முட்பரமதென்னே
கோன்முறையாறுமுகநாவலசற்குருமணியே. (௩௩)

நால்வர்பெருமைப்பிரசங்கப்பாலெநயந்தன்னைநின்
பால்வருவார்நனைப்பால்வருவேனிளம்பாலனைநம்
பால்வருவாயென்றுன்பாலழைப்பாயையபண்பருட்செங்
கோல்வருமாறுமுகநாவலசற்குருமணியே. (௩௪)

அஞ்சவருவதுமில்லையுடையாரருட்டமரொன்
செஞ்சொற்கருதியதுபவநின்னருட்செய்கைகளின்
மஞ்சகண்கூடெனக்கண்டனம்பேரருள்வாய்ந்தமத
குஞ்சரவாறுமுகநாவலசற்குருமணியே. (௩௫)

அத்தாநினக்குத்தெரியுமன்றேசண்டையைந்தணர்முன்
கைத்தாளக்கோலத்தர்கல்லூரொன்றேதியகாரணமென்
சித்தேபல்லாயிரர்க்கேவீடுகொள்ளைசெறித்ததென்சீர்க்
கொத்தாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௬)

அரசேசொல்வேந்தர்மறைவாயிலைத்திறந்தாரங்ஙனே
விரைசேர்பொழில்வெங்குருநாதர்பூட்டினர்வேறிலரோ
யிருவோரும்வாய்மூரியைந்தனர்தம்முளியன்றதென்னே
குறைதீரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௭)

நாதாமுன்னாவலர்கோமான்மன்கூனினைவிந்துசண்ணினின்
நீதோய்தரச்சிவன்பாலிரந்தாரென்பசேர்பிறவிப்
போதாருமப்பிணியேனோர்க்குப்போக்கினரோபாலென்
கோதீரெம்மாறுமுகநாவலசற்குருமணியே (௩௮)

சித்தேசொல்வாதபுரிப்பெருமான்றன்முன்றென்மறைக்காத்
தொத்தாரிதழியரோசென்றவராதாசூழ்ந்திலராய்ச்
கத்தாவென்றப்புறங்கண்டனரேயென்னைசாரணஞ்சீக்
கொத்தாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௩௯)

அருளேமுன்னாலடியோகீசுரராருளாசரர்மாட்
கொருசீர்க்குமரனைத்தீவிழியாலெரித்தாருதுவே
முருகார்குமரனைத்தந்ததெம்ருலிதின்புற்றதென்னே
குருவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௪௰)

ஞாலத்துளார்நன்றுசீதறியார்நம்மனோர்பலர்நிலை
பாலர்க்குப்போதங்கொளுத்துறநீசெய்தபண்பினரு
ணாலெத்தனைநனிகாலத்தசீலத்தநோன்மையநு
கூலத்தவாறுமுகநாவலசற்குருமணியே. (௪௧)

முப்பானிரட்டியின்மும்மைகொள்வாரெப்புபூபுதல்வர்
வைப்பார்மடங்கள்குருபூசைகளன்பர்வைபவமப
ளப்பாவங்கக்குவழங்கவைத்தாயுன்னருள்வண்மையென்
குப்பாயம்மாறுமுகநாவலசற்குருமணியே (௪௨)

மூன்றேபதார்த்தஞ்சுத்தாத்துவிதம்முடிவென்றுமறை
தேன்றேய்மறைதந்திரமிரண்டும்மொத்துச்செப்புமுண்மை
வான்றேய்மெய்கண்டவழிப்பானுமெனவாய்மைவைத்தாய்
கோன்றேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௪௩)

நீருநெருப்புமுணரச்செய்தார்தமிழ்நேர்மையொர்சாற்
பேரருட்காழியிறைவரவர்கொள்கைபேணியநீ
பார்நிலமுற்றுநிதமுணரச்செய்தபான்மையென்னே
கூரருளாறுமுகநாவலசற்குருமணியே. (௪௪)

மறைபரிகுசைவத்தினிந்தைபொருதமனமுதலா
வறைபதிஞறுமுன்வேண்டிக்கொண்டாரருணந்தியென்ப
விறைவவியந்மெருடுதோன்றினேயெம்பிருளிரித்துக்
குறைதீராறுமுகநாவலசற்குருமணியே. (௪௫)

கைச்சுட்டிஞர் கள்ளஞ்சாட்டிக் கொடுத்தொளணியுந்
மெய்ச்சுட்டிஞர் ... தமிழ்ந் நாட்டின்விரிபிரசங்
... ச்சுட்டிஞனெனிகாட்டினை ... மயங்கலிதவிர்க்கக்
குச்சுட்டுமாறுமுகநாவலசற்குருமணியே (௪௬)

இந்நீணிலத்தினின்மெய்ம்மைப்பாபுரணைறெ ... தெருந்தச்
சொன்னேன் ... பா ... தூறை ... பெலாதிம் பந்தும்பக்குமியா
மன்னேயெனநீவாறைத் ... ருள்வா ... முடிமே
... ரான்னேனெமாறுமுகநாவலசற்குருமணியே. (௪௭)

ஆருடையமெனேயனை ... யேனைநின்பொற்
றுளினையேயுறுதந்தவெ ... வைய் ... தம்பிப்பச்
சூழுமெவி ... திபபர்பா ... வாழ்வி ... மெனென்
சோனரிமாறுமுகநாவலச ... குரும ... யே. (௪௮)

அன்னேயருள்மெய்ச்சிவஞானபோதங்கொண்டாணிமுக்ழுத்
தென்னே ... முக ... நினமுயபிருந்த ... நுகமெச ... ஞுவே
பொன்னேரமுநின்னருள் ... கொ ... முமா ... மயமச்செய்தியதே
... ன்னேனெமாறுமுகநாவலசற்குருமணியே. (௪௯)

கோல ... கலரவா ... தா ... கணகோ ...
மால ... தவிவதா ... பரி ... சிவாசதிப
லீலாதிபமணிவா ... டாபம ... பாபோரசன
கடலாவெம்பாறுமுகநாவலசற்குருமணியே. (௫௦)

சண்ணீர்க ... மல ... தம்பின்னோ ... ரஞைவார் ... தங்காலில்விதி
கண்ணீர்க்கமலமனிந்தே ... நான்மகன் ... மலேக்கண்விதியா
வண்ணுவந்தோமற்றமைந்திலதேயமெம்தன்னையருள்
கொண்ணுமெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫௧)

முப்புரஞ்செற்றுமென்றோர்பதைமூட்டிமுடித்ததெல்லாந்
தப்பிலர்மூவரையெய்ப்பிலர்வேலைக்குத்தக்கவனொன்
றப்புறங்கொண்டதையொப்புறவோர்ந்தனமாவிதென்கொல்
குப்புரவாறுமுகநாவலசற்குருமணியே. (௫௨)

ஐயஞ்சிலரடியார்க்கெளியன்னென்றருந்தமிழ்ப்பாப்
பொய்யஞ்சுகொற்றங்குடிபுகுந்தார்க்குய்த்தபொற்பிதென்னே
பையஞ்சினர்முதலோர்மன்றாணின்றதைப்பார்த்திலர்செய
குய்யஞ்சொலாறுமுகநாவலசற்குருமணியே (௫௩)

மீளவிலாமுத்தியென்றருண்மன்றுள்விகிர்தரவ
ராளைவிழுங்கிக்கொலம்மையப்பாவலஞ்சவாளையெல்லா
மாளச்செய்துட்கொண்டசிங்கொண்டாரிதன்வாய்மையென்றோ
கோளுரையாறுமுகநாவலசற்குருமணியே (௫௪)

ஆள்விழுங்கிக்கொருளவொன்னவர்தவற்புகுந்தொல்
கோளிலழகுசிற்றம்பலத்தூரொருகுறவி
ஞளுமொருவரொருவரைப்பேணினிராநாகண்டதே
கோளரியாறுமுகநாவலசற்குருமணியே (௫௫)

கண்டவர்தாமறிந்காணுகவருநின்றாடகியொன்றுச
கொண்டிடஞானவொளிபரமனைபவர்கொள்பயனுந்
தண்டவிலாதுசமமாவயகவருந்தளையதைதராய்
கொண்டலெம்மாறுமுகநாவலசற்குருமணியே (௫௬)

மூப்போடிளமையறிவினிலன்றிபபொய்மொழியுடல
யாப்பாவிலேயென்றிடநிலைமைவழுக்கதிளேர
வாய்ப்பாடயில்லின்முறியோருமோர்குமகிழவைத்தாய்
கோப்பாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே (௫௭)

வேதத்தினந்தமுடிவேசிதரநாவிடமபொருட்ட
போதததினைத்தமடுத்தோராறிகுவபோதமில
நாதத்தரெய்யானறியவல்லநாவருடுவார்த
கோதித்தையாறுமுகநாவலசற்குருமணியே. (௫௮)

தேவாரமெனறருடென்மறைநூலைத்திருமுதலவ
ராவாவிலககய்சளவகுத்தாளதாரியதை
மாவாழ்மன்றுனைபொருமைபலசிதலவாயகளித்தார்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௫௯)

நாடோறுமன்றுள்வருவார்தம்பாற்சற்றுநாவசைத்தா
லேடேவருமதையின்றிமன்றுடுமிறைவரன்பர்
மாடேசென்றங்கைவருந்தவெழுதியவாய்மையென்னே
கோடாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬0)

முன்னேபிறந்ததருள்வாசகந்தமூவர்மொழி
பின்னேபிறந்ததுபேணுமிவற்றைமுன்பின்னெனவே
மன்னேர்மொளநம்பியாண்டார்வகுத்தனர்வாய்மையென்னே
கொன்னேரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௯௧)

சொல்லார்தமைசைவத்திருமுறைச்சூழலைச்சொலலியுமன்
பொல்லாதபிள்ளையெனவொருநாமம்புனைந்தவர்தாஞ்
சொல்லாரெனினைத்திருமுநாயனார்சூழிற்பொல்லார்
கொல்லோவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௯௨)

பெற்றோர்தமக்குதுபொல்லாதபிள்ளையெனினும்பிறர்
சற்றேநயந்துமன்கொண்டாடவேதந்தைதாயும்வெள்க
வற்றுந்தைசைவத்திருமுறைச்சூழலவகுத்தநெறிப
கொற்றுவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௯௩)

திருமுறைகண்டிராசராசமன்சென்னிவளவன்
வருமுறையிலவெளிற்பொல்லாதபிள்ளையயின்ரப்பது
திருமுறையாவர்சொலவல்லுநர்யார்கதுதான்செமாந்
குருமுறையாறுமுகநாவலசற்குருமணியே. (௯௪)

என்றூண்டைபப்பமவளுளிகேரமிவைமுதலா
வள்ளியுட்கொண்டதொராலந்தமோபிள்ளையந்தரவா
கள்ளம்வெளிவரவுள்ளூறுமாறுறைகாட்டிற்றன்னே
கொள்ளருமாறுமுகநாவலசற்குருமணியே. (௯௫)

பொல்லாதபிள்ளையினல்வருநன்மைபுகுந்துணைகிற்
சொல்லாலவிடலாமேநல்லவணமிணைச்சுவேதவநர்க்
கொல்லேலைசைவாமமுற்றுமளிந்துவுந்திவியென்னே
கொலலோவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௯௬)

நாலவர்தமிழவைநான்மறைக்குள்ளுறைநான்மறையே
நால்வரவற்றைவெளியிடன்மாத்திரமணிணனரோ
நால்வரவர்சிவசித்திதான்வந்தநாதர்களே
கோலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௯௭)

சிவமேயருட்சத்திசாதாக்கியமைந்துசெம்முகமாய்ப
பவமாரதோமுகத்தாறுமுகமவைபற்றியவை
தவமாரவொன்றெனமானுடமாய்ச்சண்டைசார்ந்ததன்றே
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௯௮)

சிவமேயருட்சத்திவாகிசத்துவஞ்சேர்ந்துயிருற்
பவமேதுடைப்பவிருமாயைதாண்டிப்பகுதியொரீஇ
தவமார்கொலுவிருந்தப்பரென்றிங்கன்றழைத்துதன்றே
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௬௬)

சிவமேயருட்சத்தியாமயிற்றேய்ந்துநிருநிறுத்த
துவமார்வியாசசளத்திறுலாலரங்கரணு
நவமார்நரனென்றுபிநயநகா ப ர ய ர க னே
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே (௭௰)

சிவமேயருட்சத்திரனவபாகநீதருந்து த
பவமாருமாயைபகுதியெயம்புசபப வாருயிர்
துவமோங்சவாதபுரிவந்துவாயுவுதவைபு ப த ன்றே
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே (௭௧)

நாலவர்வரமொன்றுந சிரபாவ ய ப த னே
நாலவர்வரமொன்றுறுமேசடபாவநயநரந்தன்றே
நாலவர்வரமொன்றுசசபாவநர நதன்றே
கோலமெயமாறுமுகநாவலசற்குருமணியே. (௭௨)

நால்வர்வரமொன்றுறுசிடபாவயபதனே
நால்வர்வரவனைநாலவனைவநதுநலாநடனை
நாலவழிநின்றாறுநாலவர்பெறவ துநானமையமே
கோலமெமமாறுமுகநாவலசற்குருமணியே (௭௩)

சிவமேயருடசத்தியாமுருவாமுசிவகாமியெனமுரு
தவமாரிருமைததனமாயமிர்தந்த குமுந்தியாமு
சிவமேயிருமைச்சுடராமிருமைநதிருநலகுமார
குவமாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௭௪)

இருமைத்திருநல்குமீருணர்வாமிவ்விரசசிய
மொருமைத்திருவுருவேய்ந்தருளாமின்புறுபயமா
மிருமைகளெழுமைகளுமெமமைக்குமெங்களிருளுசெலவமாய
குருமெய்த்தவாறுமுகநாவலசற்குருமணியே. (௭௫)

நானேயறிகுவனச்செல்வமேன்மையங்நான்முகன்மா
ருனேநொடிப்பவன்றுமேயறிகுவர்தன்மயமாங்
தேனேயநியச்செல்வருள்வீட்டிற்றிளைப்பதன்றே
கோனேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௭௬)

ஆர்செல்வமாமருட்பாலவேட்டெம்மாரருளாகரவின்
பார்செல்வமாஞ்சண்பைநாவலர்செய்யருட்பால்வழியை
யிச்செலவுலகினிலெயாவர்வல்லார்சொலவெண்ணிடத்தான்
ருச்செல்வவாறுமுகநாவலசற்குருமணியே. (எஎ)

இருபாடபர்காவொருபாலேவேடெம்மியற்சண்பையா
ரிருபாடபர்காவொருபாற்பொருளையிறைஞ்சினரா
யிருபாடபர்காவொருபான்மொழியையெடுத்தொலித்தார்
குருபாவொரீமாறுமுகநாவலசற்குருமணியே (எஅ)

ரொலிபேசிவந்த நியமமியற்றரசரா
மீரொலிபோமைந்திரமாகலையாவையுமா
மீரொலிபேடுகதிமுதநிகளாமெயப்பொருள நஞமாக
கூரொலியாறுமுகநாவலசற்குருமணியே. (எகூ)

முமமைந்குமுயப்பரேனுநாவென்மேனயெம்முழுமுதல்வ
ரம்மையப்பரல்லவுருநாமகருளியழைத்தருளிச்
செம்மையப்பாலுண்டதுதமிழாகிநகைவிட்டிற்றன்றே
கும்மையிலாறுமுகநாவலசற்குருமணியே. (அ0)

குலேமயன்றூற்றதுகுலேயனைப்பெயதுதொலசிவநதின்
பாலதுவாய்வயினபாலதுவாயுமைபபாலதுவாய்
வாலியதென்றமிழ்ப்பாலதுவாய்வந்தமாமறையே
கோலமெவமாறுமுகநாவலசற்குருமணியே. (அக)

பல்வழக்கெனறதுவல்வழக்கேயதுவான்பதியன்
ஞெல்வழக்காபகுபாசந்தொடர்பினைத்தூய்மைசெய்த
வல்வழக்கேயதுமாமறைமூலமன்றேமறுப்பார்
கொலமெலவராறுமுகநாவலசற்குருமணியே. (அஉ)

வேறினியென்னேவிளம்புவமன்றினுள்வேதியர்தாங்
தேறமெவழுதியவொய்வோரெழுந்துஞ்சிவலிங்கமே
பேறருள்வாசகமாமறைமூலம்பிறங்கிற்றன்றே
கூறருளாறுமுகநாவலசற்குருமணியே. (அங)

தோடென்றறிவிப்பதேயென்றுமுற்றுறுதொன்மொழியின்
பீடுயர்நாரகம்வேதமென்றும்பொருட்பெற்றியுளப்
பாடுவல்லாரருட்பாடுவல்லார்சிவப்பாடுவல்லார்
கூடருளாறுமுகநாவலசற்குருமணியே. (அச)

நாடுமிவ்வேதாவினுன்மறைக்குள்ளுறைநான்மறையே
தோடுடைத்தென்றமிழ் நால்வர்மொழியென்றதாரணையினைப்
பீடுடையோர்கொள்வருழ்நன்கிலாதவர்பேயர்பலர்
கோடுவராறுமுகநாவலசற்குருமணியே. (அரு)

நாலுசிவங்களெந்நாட்டினில்வந்தருணன்மைபெற்ற
நாலுபிறப்பிலெழுதோற்றத்தெணப்படுநான்கிலை
நாலுயிர்மாத்திரமோவரியாதிநாநாவுமன்றோ
கூலவெம்மாறுமுகநாவலசற்குருமணியே (அசு)

தருக்கம்வியாகரணம்மாதிசாத்திரசாலமெல்லா
மொருக்கிமுடிந்தமறையிடத்தமறையாமொழியு
ணிருக்கினிலேயவைபூட்டியபூட்டையிரித்தவன்றே
குருக்கொளெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (அஎ)

அற்புதமொன்றுகொல்பல்கோடியாவிரிந்தணைபொருளா
வைப்பெனலாம்பிரமாணவலியினைவாய்திறந்து
செப்பவுமொப்பிலர்தென்றமிழ்க்கியாரிவாதியர்செடபட்டன
குப்பொலியாறுமுகநாவலசற்குருமணியே. (அஅ)

சோதியிற்றும்புக்கதொன்றோவதுவன்சொற்றுயாசகவென்றே
காதலிற் கொள்ளையளித்தன்றகத்திற்களவியல்செய்
நாதரிற்சேய்தன்றமிழ்மேலதாமெனநாட்டிற்றன்றே
கோதகலாறுமுகநாவலசற்குருமணியே. (அகூ)

காக்குந்தலைவர்க்குச்சாரூப்பியந்தந்துகாத்தன்றோ
தாக்கும்பனைகட்குப்பெண்ணீக்கியாண்மைதந்தன்றது
மோக்கம்புகுத்துதமிழ்மேன்மையெங்குமுடிந்ததமமா
கோக்கந்தவாறுமுகநாவலசற்குருமணியே. (கூ0)

காசினிக்கேநரனுய்நின்றுகாட்டியகள்ளமெல்லாந்
தூசில்வெள்ளானைப்பவனிசெய்காலையிற்றொல்லுலக
மாசின்றுணர்தரவெட்டவெளியினில்வந்ததன்றே
கூடசொழியாறுமுகநாவலசற்குருமணியே. (கூக)

வெளியேயும்வந்துபின்வெள்ளக்கள்ளம்மெனமேவுங்கொலென்
றெளியேநமோநமதெற்கினின்றுற்றதென்றுண்மைசொன்னார்
களியாருபமன்னியகுருநாதர்கைம்மாறதற்கென்
கொள்ளுவார்கொலாறுமுகநாவலசற்குருமணியே. (கூஉ)

கண்ண[illegible]யி[illegible]சூ[illegible]டியைக்கக்கரமுறைத்துத்
[illegible]ன்னாருஞ்சிவ[illegible]ருபா[illegible]க்காமாமுனிசெப்பிற்றின்றேற்
[illegible]ைநயெவ்வாறெவர்பற்றவல்லார்
சொன்னவைப[illegible]று[illegible]நாவலசற்குருமணியே. (௯௩)

செ[illegible]கவ[illegible]செ[illegible]ப[illegible]ணிந்திறங்கடம்மா
[illegible]மன்பாரிடைத்தெண்ணுநர்க்கே
[illegible]ருப்[illegible]ரிப்பிராமாணம்விளங்குமிருள்
[illegible]ருமணியே. (௯௪)

பன்று[illegible]ணை[illegible]கண்ட[illegible]தப்பயின்மரபி
னன்று[illegible]நடைந்தவரே
கன்று[illegible]கைகண்டகருந்தருள்
[illegible]வலசற்குருமணியே. (௯௫)

மூலருமை[illegible]யம்முதுதமிழின்
பால[illegible]
[illegible]சொல்வதென்
[illegible]வலசற்குருமணியே. (௯௬)

பகலியர்கோன்[illegible]குப்புரிதமிழின்
[illegible]தடைப்பட்டுநின்
றிகலி[illegible]தார்
குகலி[illegible]வலசற்குருமணியே. (௯௭)

ஆறி[illegible]வருட்பரியின்
மீறி[illegible]நவித்தகராற்
[illegible]மிதன்னே
கோ[illegible]வலசற்குருமணியே. (௯௮)

சேரலர்ச்சோ[illegible]லைமலையிறைசீரங்கி
னோரரங்[illegible]தியவாதியுள[illegible]தமிழ்நேர்மையென்னே
சேரலர்சேருமெனபதுசொல்லினிற்றிருங்கொலோ
[illegible]ருளாறுமுகநாவலசற்குருமணியே. (௯௯)

முன்னேயிமயத்திருமணநாளினின்முதுணர்வின்
மன்றுங்குறுமுனிதென்னாட்டவர்தமிழ்வல்லர்மறை
பன்னுபகவதுசொன்றுமெனிற்சென்றுபார்ப்பலென்றார்
குந்நேரவாறுமுகநாவலசற்குருமணியே. (௱)

மணக்காலைவந்தருண்மாதவன்பால்வளர்வண்டமிழ்தா
னிணக்காலை வேலற்கு முன்வந்ததாயருணேரமுன்றச்
கிணக்காலையென்றென்றுநின்றுமுக்காலைகிளர்ந்ததன்றோ
குணக்காலையாறுமுகநாவலசற்குருமணியே. (௧0௧)

விரித்ததிருமுறையீராறுஞ்சைவம்விளைநிலமே
பரித்தபன்னூன்குசித்தாந்தமுமங்கட்பயில்விளைவோ
தெரித்ததமிழ்ப்புவிச்செங்கோலரசுசெலுத்திடவங்
குரித்தருளாறுமுகநாவலசற்குருமணியே (௧0௨)

சீரார்கைலைவழிவந்தமெய்கண்டதேவர்முதற்
பேரார்குரவர்முன்னாட்டுசித்தாந்தப்பெருப்பயனைப்
பாரோர்கொண்டுய்யப்பகுத்தளித்தாயருட்பண்பின்மதிக்
கூராரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧0௩)

சுத்தாத்துவிதசித்தாந்தமென்றோதுமெய்த்தூநெறியை
வைத்தாண்டசைவகுலதெய்வமேயுன்னைவாழ்த்துமன்ப
ரொத்தார்திசைக்கென்வணக்கமெழுநான்றுமுறுகவருட்
கொத்தாரெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧0௪)

அப்பாமெய்ச்சைவவரசேவையாக்கிரவாசனமே
றப்பார்நல்போகிற்சுகாசீனமையமர்துய்யகொலு
வெப்போதுமென்னுளங்கொணடேன்கலியுமிரிந்ததன்றே
குப்பாயம்மாறுமுகநாவலசற்குருமணியே (௧0௫)

அருட்பாவென்றோதுமம்மெய்யமொழிவேற்றுமையதனைக்குப்
பொருட்பான்மைபெற்றதைச்சைவமுறைக்கேபொருந்துமென்று
மருட்பாக்களைந்தத்திருமுறைமேன்மைவரப்புசெய்தாய
குருப்பார்வையாறுமுகநாவலசற்குருமணியே (௧0௬)

வெண்ணீறும்பொன்னொளிமேனியுங்கண்மணிவீறுகும்
பண்ணார்சிவப்பிரசங்கக்கொலுவும்பழுத்தபண்பு
மெண்ணார்நின்செம்முகமண்டலமுநெஞ்சிருத்திவைப்பாய்
கொண்ணீயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧0௭)

ஐயாமெய்ச்சைவவரசேயொர்விண்ணப்பமம்புவியிற்
பையாரரவல்குலார்மாயப்பாழிற்படருமெனைக்
கையாதுநின்னருட்கைகொடுத்தாளக்கடனினக்கே
குய்யாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧0௮)

அழுக்காறடைந்திங்கிழுக்காற்றில்வீழ்ந்திட்டலைந்துமந்தோ
வொழுக்காறுகாட்டிவழுக்கோம்புதுட்டவுவரிமக்கள்
விழுக்காற்றிலென்னைவழுக்காதருளுகமெய்ம்மையன்பர்
குழுக்காக்குமாறுமுகநாவலசற்குருமணியே. (௧௦௯)

குற்றங்களைந்துகுணங்கொள்ளலேநல்லகொள்கையென்ப
குற்றங்கள்கொண்டுகுணநீக்கலேநல்லகொள்கையென்றே
நற்றவர்பாலிருந்தெங்ஙனங்காலங்கழிப்பன்கண்டாய்
கொற்றவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௦)

தாமின்புறுவதுலகின்புறக்கண்டுதாந்துமுள்ளே
காமுறல்செய்பமன்கற்றறிந்தாரென்பகாரியமஃ
தாமிந்தநாளினிலெங்ஙன்கொலோசென்றதையவையோ
கோமுந்துமாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௧)

ஐயநின்னன்பர்குழுவிவன்யார்மற்றகற்றுகெனப்
பொய்யனறிமுகமில்லாதவன்கடைபோயொழியா
துய்யநம்பால்வருகென்றளிப்பாய்மெய்யுணர்வளித்த
குய்யவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௨)

நன்றேயுறுகமன்றீதேயுறுகவென்னுயகமே
நின்றேயமார்சைவதேசிகக்கோலமுநின்பெயரு
மென்றேயுமெள்ளளவும்மறவாவரமீந்தருளாய்
குன்றேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௩)

நான்செய்கருமங்கள்பூசைசெபந்துதிஞானமெல்லாங்
கூன்செய்பிறைச்சடையார்கொள்கைநாட்டுகுருமுதனீ
தான்செய்ததேயருடான்செய்ததேசிவந்தான்செய்ததே
கோன்செயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௪)

ஐயவிழுக்கள்பலவுளவின்னுமவற்றைநின்சீர்
பெய்யுமவையிடைச்சொல்லின்விரியுமென்பீதியினுற்
பையநிறுத்தினன்காலங்கண்டேபகரப்பணிப்பாய்
குய்யவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௫)

சித்தர்கண்ஞானிகள்சத்தியயோகிகள்செய்தவத்தர்
முத்தர்கள்கூடியபத்தவிலாசத்தின்முந்திநிற்குஞ்
சுத்தகொலுவெனக்கெவ்விடையென்றுகொரேற்றுவிப்பாய்
கொத்தருளாறுமுகநாவலசற்குருமணியே. (௧௧௬

ஈயாதலோபிகள்வாயிலைக்காத்திட்டிரந்திரந்திங்
கோயாநின்றார்பலர்பிச்சைபுக்காயினுமுண்பதலாற்
சீயானவர்தமைச்சிந்திப்பனோவுன்றன்செயலனோ
கூயீயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (ககஎ)

கங்கைக்கரையிற்கபிலைகொல்வார்சிலர்காதுகர்பா
லிங்கெத்தனையருநூலுரைத்தென்னவையேற்றுண்மகிழ்
பொங்கியும்பின்புபுறம்பழிப்பாரிவர்போங்கதியென்
கொங்கலராறுமுகநாவலசற்குருமணியே. (ககஅ)

நின்னருளாற்சண்பைமன்னருளாற்சொல்லினரரசு
தன்னருளாற்சுந்தரனருளான்மணி சான்மொழியா
னின்னருளாலன்றியானறிந்தேன்பிறவென்பதென்னை
கொன்னரனாறுமுகநாவலசற்குருமணியே. (ககசூ)

ஈனவுலகினிற்பொய்புறங்கூறியிகலவிளைசகுங்
தீனர்மிகுத்தனர்நீதிபிழைத்ததுச்சையெங்கு
மானதுலகினிலேழைபிழைப்பதெவ்வாறருளாய
கோனருளாறுமுகநாவலசற்குருமணியே. (கஉ௦)

பொய்யனிவன்சற்றுநேரிலனென்றெனைப்போதிப்பர்காண
வெய்யரவருரைகொண்டெளியேனைக்கைவிட்டனையே
லுய்யுநெறிபிறிதில்லையப்பாவெங்களுத்தமனே
குய்யவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஉக)

நின்பெயரேசொலியாசேதிமாசலநேர்ந்தவரு
மன்பினறுசுவைவர்க்கமொடன்னமருந்துகில்பொன்
னின்புறவெய்திமன்சம்பன்னராகுபவிங்கிதென்னோ
கொன்புரியாறுமுகநாவலசற்குருமணியே. (கஉஉ)

நின்னருணூல்கற்றுநின்னெறிக்கேநின்றநேர்மையர்தா
மென்னவரேனுமற்றென்னவரேயவரென்னனதாஞ்
சொன்னவையேனுமன்சொன்னவையேசெய்தொழும்பனியான்
கொன்னருளாறுமுகநாவலசற்குருமணியே. (கஉங)

ஐயாநின்மெய்ச்செயலெல்லாமெமக்கிங்கருட்செயலே
யையாநின்மெய்க்கொளுவெல்லாமெமக்கிங்கருட்கொளுவே
யையாநின்மெய்ம்மொழியெல்லாமெமக்கிங்கருண்மொழியே
குய்யாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஉச)

தேசமெலாம்புகழ்தேவேநின்பாதத்திருப்பொடிதான்
வாசநன்கூட்டுறுமான்மதமேயெனுண்மான்மதத்தை
வீசிமற்றோட்டுறுமாமருந்தேசிரமேற்கொண்டனன்
கூசொழியாறுமுகநாவலசற்குருமணியே. (கஉரு)

எந்நாட்டினுமுயர்தென்னாடுசெய்தவிருந்தவத்தாற்
பொன்னாட்டினுமுயரீழநன்னாட்டிற்புரியுநல்லூ
ரிந்நாட்டிருப்படைவீடியைந்தோயெனையேன்றுகொள்வை
கொன்னாட்டுமாறுமுகநாவலசற்குருமணியே. (கஉசு)

தேவேயருளுகசெல்வாவருளுகதெய்வவருட்
காவேயருளுககண்ணேயருளுககண்மணியுட்
பாவாயருளுகபாலனையாண்டருள்பாலித்திடுங்
கோவேயெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஉஎ)

மாலார்பிறவியின்மாய்ந்தேனடைக்கலமங்கையர்தம்
பாலேதிரிந்துலைந்தெய்த்தேனடைக்கலம்பாழ்மலமாந்
தோலாவிடமொழித்தாள்வாயடைக்கலந்துய்யவரு
கூலாவெம்மாறுமுகநாவலசற்குருமணியே. (கஉஅ)

எப்பொருணூலையுமொப்பவொட்டாதிங்கிரும்பகைசெய்
தப்பழுக்காறுகொன்றெப்புரவாண்மைகொள்சாதுக்கடந்
துப்பினிம்மாலைசமர்ப்பணஞ்செய்தனன்சோதிநின்பாற்
குப்புரவாறுமுகநாவலசற்குருமணியே. (கஉகூ)

புண்ணியநின்னருண்மேன்மையெங்கேயென்றன்புன்மையெங்கே
பண்ணியலுந்துதிமாலையென்றோர்குற்றம்பண்ணினனா
லண்ணனின்சேயன்பினாலமைத்தேன்பொறுத்தாண்டருள்சாட்
குண்ணியவாறுமுகநாவலசற்குருமணியே. (கஉ0)

நூற் பயன்.

பத்தியினாற்சற்குருமணிமாலைபடிப்பவர்க்குச்
சித்தியுமுத்தியுமீவாரழகுசிற்றம்பலத்தார்
கொத்தருளாறுமுகநாவலசற்குருமணியா
லித்தலங்காத்துக்கடப்பாடுபூண்டவிளையபினன்றே.

நாவலசற்குருமாமணிமாலைநயந்துட்கொள்வார்
நாவலராய்ப்புவிகாவலராய்ப்பொலனிருட்டினொழித்
காவலராயருட்கண்வலராயின்பச்சுட்டமுறுவார்
தேவலராவர்சிற்றம்பலத்தாரடிசேர்ந்திருந்தே.

சற்குருமணிமாலை முற்றிற்று.

மெய்கண்டதேவர் திருவடிவாழ்க.

ஆறுமுகநாவலனடியிணைபரவுது
தேறுமுகவின்பந் திருந்தாற்பொருட்டே.

திருச்சிற்றம்பலம்.
